# இலங்கையின் யுத்தத்திற்குப் பின்னரான சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் செயன்முறையில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் வகிபாகம் : விசேட ஆய்வு நாவிதன்வெளிப் பிரதேசம்


**Supervisor**
*Mr. MM. Fazil,*
*Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Mr. R. Vimalraj,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*


## ஆய்வுச் சுருக்கம்


நீண்டகால ரீதியான மோதல்களைத் தீர்ப்பதற்கான மாற்றுத் தீர்வு வழிமுறைகளுள் ஒன்று சமாதானத்தினைக் கட்டியெழுப்புதலாகும். அதிலும் குறிப்பாக யுத்தத்திற்குப் பிந்திய சமூகங்களில் நிலைத்து நிற்கத்தக்க அமைதியினை உறுதிசெய்வதற்கு பல்வேறுபட்ட சமாதானக் கட்டுமானச் செயன்முறைகளில் கவனம் செலுத்தப்படுகின்றது. யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டுவருவது முதல் அடிப்படையான நிறுவனக் கட்டுமானச் செயன்முறை உள்ளடங்கலாக சமூக மீள்நிர்மாணம் வரையிலான சகல அம்சங்களையும் சமதானத்தினைக் கட்டியெழுப்புதல் எனும் எண்ணக்கரு உள்வாங்கியுள்ளது. அடிப்படையில் சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் என்பது பல்வேறுபட்ட அமைப்புக்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு செயன்முறையாகவும் விளங்குகின்றது. வரலாற்றில் யுத்தத்திற்குப் பிந்திய பல்வேறு சமூகங்களில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களே சமாதானத்தினைக் கட்டியெழுப்பும் செயன்முறையில் ஈடுபடும் முகவர்களாகச் செயற்பட்டுள்ளன.

இப்பின்புலத்தில் அம்பாரை மாவட்டத்தின் நாவிதன்வெளிப் பிரதேசத்தின் யுத்திற்குப் பின்னரான சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் செயன்முறை குறித்து இவ்வாய்வு பரிசீலிக்கின்றது. அதிலும் குறிப்பாக யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் குறித்த பிரதேசத்தில் சமாதானத்தினைக் கட்டியெழுப்புவதில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் எத்தகைய பங்களிப்பினை நல்கியுள்ளன என்ற விடயத்தினை கண்டறிய இவ்வாய்வு முயற்சிக்கின்றது.

இவ்வாய்வு விபரண பகுப்பாய்வு முறையினை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆய்வுக்கான தரவுகள் முதலாம், இரண்டாம் நிலைத் தரவு மூலாதாரங்களிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளன. முதன்மைத் தரவுகள் மட்டுப்படுத்தப்பட்ட அவதானம், நேர்காணல் என்பவற்றின் மூலம் பெறப்பட்டுள்ளதுடன் இரண்டாம் நிலைத் தரவுகள் இவ்வாய்வோடு தொடர்புடைய நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணையத்தள தரவுகள் என்பவற்றினூடாகப் பெறப்பட்டுள்ளன.

முடிவாகக் கூறுவதாயின் ஆய்வுப் பிரதேச சமூகங்களிடையே காணப்படும் நல்லிணக்கத்திற்கு ஊறுவிளைவிக்கும் காரணிகளை இணங்கண்டு நிலையான நல்லிணக்கத்தினை எட்டுவதற்கு பரந்தளவான சமாதானக் கட்டுமானச் செயன்முறையுடன் கூடிய அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு மிக இன்றியமையாதது எனலாம்.



**பிரதான சொற்கள்:** யுத்தத்திற்குப் பிந்திய சமூகம், சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல், நல்லிணக்கம், அரசசார்பு நிறுவனங்கள், அரசசார்பற்ற அமைப்புக்கள்